DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**OS.NO.133/2025**

Deposition of Witness : D.W.1

| | |
|---|---|
| Name-**திரு.செல்வராஜ்** | Father's Name – |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **09.07.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை –**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்தேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவை. சரி என ஒப்புக்கொண்டு எனது கையொப்பத்தினை செய்துள்ளேன்.

**சான்றாவணங்கள் :**

1. 23.04.2021ம் தேதியன்று வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த ஈட்டுக்கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் – பி.வா.த.சா.ஆ.1

2. 23.04.2021ம் தேதியன்று வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து எழுதிக் கொண்ட உழவடை ஒப்பந்த பத்திரத்தின் பதிவு செய்யப்படாத அசல் – பி.வா.த.சா.ஆ.2 (வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

3. 10.08.2025–ம் தேதியன்று கடமலைக்குண்டு காவல் நிலைய குற்ற எண் 180/2025 பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் வாதி வகையறா மீது பதிவு

செய்யப்பட்ட அச்சு முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் – பி.வா.த.சா.ஆ.3

4. 10.08.2025–ம் தேதியன்று கடமலைக்குண்டு காவல் நிலைய குற்ற எண் 179/2025 வாதி கொடுத்த புகாரின் பேரில் பிரதிவாதி வகையறா மீது பதிவு செய்யப்பட்ட அச்சு முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் – பி.வா.த.சா.ஆ.4.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பி.வா.சா.ஆ.1 ஈடுகடன் பத்திரம் நான் வாதிக்கு எழுதிக் கொடுத்ததென்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வட்டிக்கு கொடுப்பதற்கு சம்மதித்து தான் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரும் வழக்கில் வாதியின் மனைவி கோகிலாவிற்கு ரூ.15லட்சத்திற்கு ஈடுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2. நான் கோகிலாவிற்கு ஒப்பந்தம் ஏதும் கொடுக்கவில்லை. நான் கோகிலாவிற்கு வட்டியும், முதலும் கட்டியுள்ளேன். எனது சொத்தை கோகிலாவிற்கு நான் எப்போது சுவாதீனம் கொடுக்கவில்லை. 22.12.2023ம் தேதியன்று தான் நான் கோகிலாவிற்கு ஈடுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு எதிராக கோகிலா ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.51/2025 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. அந்த வழக்கின் படி கோகிலா சொத்தினை அனுபவிப்பதற்கு நான் இடையூறு செய்யக்கூடாதென கூறியுள்ளார் என்றால் அவர் வழக்கில் அவ்வாறு கூறியுள்ளார். வாதி எனக்கு எதிராக நீதிமன்றத்தில் OS No.77/2025 வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நான் எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த எதிர்

வழக்குரையின் நகல் என்முன் காட்டப்படுவது தான் அது வா.த.சா.ஆ.3. வா.த.சா.ஆ.3 பாரா 13ல் எதிர்கோரும் மனுவில் வாதியின் மனைவி கோகிலாவிற்கு 18.03.2022ம் தேதியன்று ஒரு வர்த்தமான உழவடை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. நான் எதிர்வழக்குரைக்கு மாறாக எதிர்கோரும் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்கோரும் வழக்கு சொத்தானது தற்போதும் வாதியின் மனைவி கோகிலாவின் சுவாதீனத்தில் தான் உள்ளதென்று சொன்னால் சரியல்ல. பதிவு ஈடுகடன் சம்பந்தமாக பதிவு ஆவணம் ஏதும் எழுதிக் கொள்ளவில்லை. உழவடை ஒப்பந்தத்தில் உள்ள 1ம் நபரின் கையொப்பம் வாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உழவடை ஒப்பந்தமானது நான் மோசடி செய்வதற்காக உற்பத்தி செய்த ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. எதிர்கோரும் வழக்கின் சொத்தின் தற்போதைய மதிப்பு பற்றி எனக்கு தெரியாது.

5. பி.வா.த.சா.ஆ.3ன் அடிப்படையில் வாதிக்கு எதிராக குற்ற வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், குற்ற இறுதி அறிக்கை மட்டும் தாக்கல் செய்யவில்லை. புகாரின் படி நான் வாதிக்கு ரூ.50 லட்சத்திற்கு 4வருடத்திற்கு ஒத்திக்கு விட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் வாதிக்கு சேரவேண்டிய தொகையான ரூ.50 லட்சத்தை நான் டெபாசிட் செய்யவில்லை என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.த.சா.ஆ.4 ஆவணமானது வாதி என் மீது புகார் கொடுத்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். நான் வாதிக்கு கொடுத்த ஈடுகடன் முடிந்துவிட்டது சம்பந்தமாக உரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் கோரவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. ஈடுகடன் பத்திரத்தின் அடிப்படையில் எதிர்கோரும் சொத்தினை பொறுத்து வாதியின் அனுபவத்தில் இருப்பதால் சுவாதீனப்பரிகாரம் கேட்க முடியாதென்று சொன்னால் சரியல்ல. எதிர்கோரும் வழக்கு சொத்து வாதியிடம் உள்ளது என்பது குறித்து அடங்கல் நகல் தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால் சரிதான். ஈடுகடன் பத்திரத்திற்கான வட்டியை நான் வாதிக்கு கொடுக்கக்கூடாதெனவும், அவரை மோசடி செய்யவேண்டுமென்று நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.09 17:02:25 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.